**விவசாயிகளின் பிரச்னைகள் தீர்க்கப்படும்**

First Published : 05 Apr 2011 12:06:22 PM IST

திருவண்ணாமலை, ஏப். 4: கீழ்பென்னாத்தூர் தொகுதி விவசாயிகளின் அடிப்படைப் பிரச்னைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என அதிமுக வேட்பாளர் ஏ.கே.அரங்கநாதன் கூறினார்.

துரிஞ்சாபுரம் ஒன்றியம் ஆர்ப்பாட்டம், வேடந்தவாடி, எரும்பூண்டி, வசந்தவாடி, கருமாரப்பட்டி, பாலானந்தல், வெளுகனந்தல், மாதலம்பாடி, களஸ்தம்பாடி, சானானந்தல், நூக்காம்பாடி உள்பட 27 கிராமங்களில் திங்கள்கிழமை அரங்கநாதன் வாக்கு சேகரித்தார்.

அப்போது அவர் பேசும்போது, தமிழகத்தில் மீண்டும் அதிமுக ஆட்சி அமைந்தவுடன் மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படும். விவசாயிகளின் அடிப்படை பிரச்னைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் போஜப்பன், அவைத் தலைவர் கோவிந்தசாமி, துணைத் தலைவர் சம்பத், கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடன் சென்றனர்.

**நெல் சாகுபடியில் ஆரம்பகட்ட பிரச்னைகளைத் தீர்க்க ரோட்டாவேட்டர்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 06,2011,00:00 IST

நெல் சாகுபடியில் நெல் நாற்றுகளை நடுவதற்கு நிலத்தைப் பக்குவமான முறையில் கொண்டு வருவதற்கு விவசாயிகள் ஆசைப்படுவார்கள்.



எவ்வளவு சீக்கிரத்தில் இந்த வேலையை முடிக்கி றோமோ அந்த அளவிற்கு நடவுப்பணிகளை முடிக்கலாம்.

நெல் நாற்றுக்களை துரிதமாக நட இயலாமைக்கு பல பிரச்னைகள் காரணமாக உள்ளன. நம்முடைய வேளாண்மை பெரும்பாலும் பருவத்தையே நம்பி உள்ளது. ஆகவே தண்ணீர் இருக்கும்போது இப் பணியினை முடித்தால்தான் காலத்தே அறுவடையை முடித்து இரண்டாவது பயிரை செய்ய முடியும்.

இல்லாவிட்டால் இரண்டாவது பயிரையும் செய்ய முடியாமல் முதல் பயிரின் அறுவடையும் மழையில் அகப்பட்டு மகசூல் பெருமளவில் பாதிக்கப்படும். விவசாயிகள் மாடுகளை உபயோகிக்க இயலாத சூழ்நிலையில் டிராக்டரால் இயக்கும் ரோட்டாவேட்டர் கருவியை உபயோகிக்கின்றனர். ரோட்டாவேட்டர் கருவி என்ன உதவி செய்கிறது என்ற கேள்வி எழக்கூடும். ஒரு ஏக்கர் நிலத்தை மாடுகளைக் கொண்டு உழுது சேறாக்க வேண்டுமென்றால் சுமார் ரூ.2,010/- செலவாகும்.

ஒரு சால் ஓட்ட (இரு பக்கமும்) ரூ. 640.00
இரண்டாவது சால் ஓட்ட ரூ. 640.00
கடைசி உழவு ஓட்டி பரம்படிக்க ரூ. 730.00
மொத்தம் ரூ. 2,010.00
இந்த செலவு (இன்னும் கூடுதலானாலும் ஆகலாம்) செய்தும் சேறு கலக்கும்போது மண் நன்றாக சேறு ஆவதில்லை. களிமண்பாங்கான நிலத்தை சேறு கலக்கி நடவிற்கு கொண்டுவர ஏக்கருக்கு 15 நாட்கள் ஆகிவிடுகின்றது. முதல் உழவு ஓட்டியதும் நிலத்தில் உள்ள பசுந்தாள் உரம் மக்குவதற்கு ஒரு வாரம் ஆகிறது. பின் இரண்டாவது உழவு ஓட்டி எஞ்சியுள்ள பசுந்தாள் உரச்செடிகளை முழுமையாக மக்கச் செய்ய வேண்டும். அப்போதுதான் சேறு பழுத்து வயலில் நடவு செய்வது எளிதாக இருக்கும். இப்பணிகளுக்கு செலவு சுமார் ரூ.2,000/- ஆகும்.

(கூடுதலாகவும் ஆகலாம்). டிராக்டர் கருவி உபயோகிப்பதால் பணியை 8 நாட்களில் முடித்துவிடலாம்.

கருவியைக் கொண்டு சேறு கலக்கி நிலம் பண்படுத்துவதை நேரில் பார்த்த விவசாயிகள் தங்களுடைய நிலத்தையும் வாடகைக்கு ரோட்டாவேட்டரை பயன்படுத்த ஆசைப்படுகிறார்கள். இந்த கருவியை வாங்குவதற்கு மானியம் வழங்கப்படுவதாகத் தெரிகிறது. கருவியை உபயோகிக்கும்போது விவசாயிகள் உழவுக்கருவி, களையெடுக்கும் கருவி, சமப்படுத்தும் கருவி இவைகளை வாங்க வேண்டிய அவசியம் இல்லை. கருவிகள் செய்யும் அனைத்து வேலைகளையும் ரோட்டாவேட்டர் கருவி ஒன்றே செய்யும்.**-எஸ்.எஸ்.நாகராஜன்**

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 06,2011,00:00 IST

சிறப்பான வருமானம் தரும் சிவப்புக்கீரை: கன்னியாகுமரி மாவட்டம் துவரங்காடு கிராமத்தைச் சேர்ந்த சேவியர் ஒரு ஏக்கரில் மீன் வளர்ப்பு, ஒரு ஏக்கரில் மரவள்ளி சாகுபடி, 25 சென்டில் வாழை இவைகளோடு 4 சென்டில் சிவப்புக் கீரையையும் சாகுபடி செய்து வருகிறார். 4 சென்டில் மாதம் ரூ.4000 வரை வருமானம் கிடைப்பதாகக் கூறும் இவர் கடைபிடிக்கும் சாகுபடி நுட்பங்கள்: சிவப்புக்கீரைக்கு வண்டல்மண் ஏற்றது. கீரைகளுக்கு பட்டம் பார்க்க வேண்டிய அவசியமில்லை. சாகுபடி செய்வார்கள். ஆனால் இவர் நாற்று பாவி சரியான இடைவெளியில் நடவுசெய்து நல்ல விளைச்சல் பெற்றுள்ளார்.

20 சதுரடி பரப்பில் மண்ணை நன்றாகக் கிளறி சாம்பல் மற்றும் தொழு உரம் ஆகியவற்றில் தலா 20 கிலோ அளவுக்கு பரப்ப வேண்டும். அதில் விதைகளைத் தூவி விதைத்து பூவாளியால் நீர் தெளித்து வரவேண்டும். விதைத்த 25ம் நாளுக்கு மேல் நாற்றுகளை எடுத்து நடவு செய்யலாம். 4 சென்ட் நிலத்தை நன்றாக கிளறி, 50 கிலோ சாம்பல், 100 கிலோ தொழு உரம், 1 கிலோ பொடித்த கடலைப் பிண்ணாக்கு, 2 கிலோ பொடித்த வேப்பம் பிண்ணாக்கு ஆகியவற்றைப் பரப்பி கிளறிவிட வேண்டும்.

பிறகு 12 அடி நீளம், இரண்டரை அடி அகலத்திற்கு பாத்திகளை அமைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பாத்திக்கும் இடையில் முக்கால் அடி இடைவெளி வாய்க்கால் இருக்க வேண்டும். வரிசைக்கு வரிசை, செடிக்குச் செடி 7 அங்குலம் இடைவெளி விட்டு நாற்றுக்களை பாத்தியில் நடவு செய்ய வேண்டும். தண்ணீர் அவசியம் என்பதால் செழும்பாக தண்ணீர் கட்டவேண்டும். நடவு செய்த 7ம் நாள் 250 மில்லி மீன் அமிலக்கரைசலை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க

வேண்டும். மீன் கழுவிய தண்ணீரை ஒருநாள் அப்படியே வைத்திருந்து மறுநாள் சரிபங்கு தண்ணீரில் கலந்து செடிகள் மீது வாரம் ஒரு முறை தெளிக்க வேண்டும்.

நடவு செய்த 15ம் நாள் மூலிகை பூச்சிவிரட்டி தெளித்தால் பூச்சிகள் அண்டாது. மகசூல் 10,000 கட்டு கீரை கிடைக்கும். கட்டு 6 ரூபாய்க்கு விற்பனையானாலும் செலவு போக ரூ.40,000 வருமானம் கிடைக்கும். (தகவல்: பசுமை விகடன், 10.3.11, தொடர்புக்கு: சேவியர், 97896 37500)

**விதை இருப்பு நிலவரம்:** ஏ.டி.டி(ஆர்)47 எப்1 விதை: 6.64 டன், விலை ரூ.24/கிலோ. கிடைக்குமிடம்: உழவியல் துறை, வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை-625 106. 0452-242 2956, 242 3046.

**தென்னை நாற்றுக்கள்:** நெட்டை - 2898 எண்ணிக்கை இருப்பு உள்ளது. விலை ரூ.30/கன்று.
**கிடைக்குமிடம்:** வாசனை மற்றும் தோட்டப்பயிர்கள் துறை, தோட்டக்கலைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர்-641 003. 0422-661 1284.

**மண் புழு உரம்:** இருப்பு 750 கிலோ, விலை ரூ.6/கிலோ. கிடைக்குமிடம்: மலரியல் மற்றும் நில எழிலூட்டும் துறை, தோட்டக்கலைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர்-641 003. 0422-661 1230.

நெல் ஆடுதுறை 43 (ஆதார விதை1) - இருப்பு 1822 கிலோ. விலை ரூ.24/கிலோ. கிடைக்குமிடம்: பருத்தி ஆராய்ச்சி நிலையம், ஸ்ரீவில்லிபுத்தூர்-626 125. 04563-260 736.டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

**தரிசு நிலத்தில் சப்போட்டா சாகுபடி**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 06,2011,00:00 IST



**மண்:**

சப்போட்டா பயிர் எந்த வகை மண்ணிலும் செழித்து வளரக்கூடியது. நல்ல வடிகால் வசதியான மண் ஏற்றது. ஆழமான வண்டல் மண் கலந்த நிலங்கள் மிகவும் உகந்தது.

**பருவம்:**

ஜூலை - ஆகஸ்ட். ரகங்கள்: கிரிக்கெட் பால், ஓவல், பாராமசி, தகரப்புடி, துவாரப்புடி, கீர்த்தபர்த்தி, பாலா, காளிப்பட்டி, கோ-1, கோ-2, பெரியகுளம் 1, 2, 3.

**பயிர் பெருக்கம்:** ஒட்டுக்கட்டிய செடிகள்

**பின்செய் நேர்த்தி:**

ஒட்டுப் பகுதிகளின் கீழே தழைத்துவரும் வேர்ச்செடியின் தளிர்களை அவ்வப்போது அகற்ற வேண்டும். தரை மட்டத்தில் இருந்து சுமார் 2 அடி உயரம் வரை கிளைகள் எதுவும் பிரியாமல் பார்த்துக்கொள்வது நல்லது. கிளைகள் மரத்தில் சீராகப் பரவி இருக்க வேண்டும். சப்போட்டா மரத்திற்கு கவாத்து செய்தல் தேவை இல்லை. உயரமாக வளரக்கூடிய ஒரு சில தண்டுகளை மட்டும் நீக்கிவிட வேண்டும். அடர்த்தியான, நிழல் விழும் கிளைகளையும் நீக்கிவிடவும்.

**ஊடுபயிர்**:

ஆரம்ப வருடங்களில் மர வரிசைகளுக்கு நடுவே காய்கறிப் பயிர்களையும், குறுகிய காலப் பழப்பயிர்களான பப்பாளி போன்றவற்றையும் சாகுபடி செய்வதன் மூலம் வருமானத்தைப் பெருக்கலாம்.

**அறுவடை மற்றும் மகசூல்:**

சப்போட்டா பயிர் வருடத்திற்கு இரண்டு முறை பெரும்பான்மையாக காய்க்கும். ஏப்ரல் முதல் ஜூலை வரை ஒரு முறையும், செப்டம்பர் முதல் நவம்பர் வரை ஓரளவு காய்க்கும். இந்தப் பயிரின் பழ முதிர்ச்சியை அறிவது சிறிது கடினம். இதர பயிர்களைப் போல் இதில் நிறமாற்றம் ஏற்படுவதில்லை.

ஆயினும் பழத்தின் தோலில் உள்ள சிறிய சிறிய கருநிறத்துகள்கள் மறைந்து, பழங்கள் சிறிது பளபளவென்றிருக்கும். பழத்தை நகத்தால் கீறிப்பார்த்தால், உள்ளே மித மஞ்சள் நிறம் தெரிய வேண்டும். பால் வடியக் கூடாது. பழத்தின் அடிப்பாகத்தில் உள்ள முள் போன்ற சிறிய நுனி, எளிதில் பிரிந்துவரும். பழத்தோலில் சொரசொரப்பு மாறி மிருதுவாகும். ஒரு எக்டருக்கு 20 முதல் 25 டன்கள் மகசூலாகக் கிடைக்கும்.

**தொடர்புக்கு:** எம்.அகமதுகபீர், 268/77, பழைய ஹவுசிங் யூனிட், எல்லிஸ் நகர் போஸ்ட், தாராபுரம்-638 657.எம்.அகமது கபீர், வேளாண்மை ஆலோசகர்,அக்ரி கிளினிக், தாராபுரம். 93607 48542.

**இயற்கை விவசாயம் ஒரு விவசாயியின் அனுபவம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 06,2011,00:00 IST

சத்தியமங்கலம் அருகே கொம்புபள்ளம் என்ற கிராமம் உள்ளது. இயற்கை சூழ்ந்த இனிய பிரதேசம்; எங்கும் சுத்தமான பிராணவாயு; இங்கு உள்ள ஐயர்தோட்டம் மிகவும் பிரபலமானதாகும். ஆரோக்கி யத்திற்கான எல்லா காரணிகளையும் இந்தத் தோட்டத்தின் உரிமையாளர் எஸ்.ஆர்.சுந்தரராமன் மிகச்சிறப்பாக வடிவமைத்துள்ளார்.

மொத்தம் உள்ள 14 ஏக்கர் நிலத்தில் 13 ஏக்கரில் இயற்கை விவசாயம் நடைபெறுகிறது. விஞ்ஞான முறையிலான நவீன வேளாண் செய்முறையை பின்பற்றாமல், இயற்கையிடம் இவர் இணைந்துள்ளார். ரசாயன இடுபொருட்களை இட்டு தீமை தரும் பழக்கத்தைக் கைவிட வேண்டும் என்பதும், எந்தச் சூழலிலும் உயிர் பறிக்கும் விஷங்களை உண்ணும் உணவை விளைவிக்கப் பயன்படுத்தவே கூடாது என்பதும் இவரின் உயரிய கோட்பாடு ஆகும்.

தாவரக்கழிவுகளை நிலத்திலேயே போட்டு எரிப்பது மிகப்பெரிய தவறு என்று இந்த வேளாண்கலைஞர் கூறுகிறார். இத்தகைய கழிவுகளை அப்படியே மண்ணில் போட்டுவிட்டால் அவை மக்கி, மண்ணிற்கு உரம் தரும். மண்ணில் மக்கிப் போன பொருட்கள் சேரும்போதுதான், ஆர்கானிக் கார்பனின் பவுதீக மற்றும் ரசாயனத் தன்மை பல்கிப் பெருகி மண் மிருதுவாகும். தாவரங்களின் வேர்கள் எளிதில் மண்ணில் ஊடுருவிச் சென்று, ஊட்டச் சத்துக் களை எடுத்துக்கொள்ள ஏதுவாகும். இதனால், விவசாயத்தைப் பூமி மண்ணே கவனித்துக்கொள்கிறது.

இதன்மூலம் செலவும் குறைகிறது. எனவே, குறைந்த அளவில் நீர்ப்பாசனம் போதுமானது. தாவரங்களின் இலைகள் பெரிதாக வளரும். இதன் காரணமாக போதுமான ஒளிச் சேர்க்கையின் மூலமும் சத்துக்களைத் தாவரங்கள் பெற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. அதனால் மகசூல் அதிகரிக்கிறது" - இவ்வாறு கூறுகிறார் சுந்தரராமன்.

மேலும் (செலவு இல்லாத முறைகளைப் பரப்பிவரும் தபோல்கரின் தத்துவப்படி) பசு, எருமை, ஆடு போன்றவற்றை வளர்த்தல், அவை தரும் கோமியம், சாணம், புழுக்கை போன்றவற்றை விவசாய இடுபொருட்களாகத் தயாரிக்கப் பயன் படுத்துதல், பல்வேறு விதமான பயிர்களை வளர்த்தல், பண்ணைக் கழிவு, மண்புழு உரம் போன்ற வற்றை இயற்கை சார்ந்த வேளாண் முறைகள் இவர்

பின்பற்றும் வழி களாகும். இவரைப் போன்ற வல்லுனர்களின் வழிகாட்டுதல் நாட்டின் விவசாய முன்னேற்றத்திற்கு அவசியமாகிறது.எஸ்.நாகரத்தினம்,56, லட்சுமி காலனி,கச்சேரி ரோடு,விருதுநகர்-626 001.

**புளி விலை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 06,2011,00:59 IST

தம்மம்பட்டி: தம்மம்பட்டி வாரச்சந்தையில், புளிப்பு சுவை மிகுந்த கொல்லிமலை புளி, கிலோ 40 ரூபாயாக உயர்ந்துள்ளது. நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை பகுதியிலுள்ள வேலிக்காடு, கீரக்காடு, செங்காடு, கொளுந்துகாடு, அருவங்காடு, குண்டனிகாடு உள்ளிட்ட கிராமங்களில் புளி விளைச்சல் அதிகம் உள்ளது.

விவசாயிகள், அங்கு கிடைக்கும் புளியை தம்மம்பட்டி செவ்வாய் சந்தையில் கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். புளிப்பு சுவை மற்றும் சதை பிடிப்பு மிகுந்து காணப்படுவதால் துறையூர், திருச்சி, சேலம், ராசிபுரம் உள்ளிட்ட பகுதியை சேர்ந்த வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் அதிகளவு வாங்கிச் செல்கின்றனர். கடந்த மார்ச் 17ம் தேதி, ஒருகிலோ புளி 27 முதல் 30 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. தொடர்ந்து புளி விலை ஏறு முகத்தை நோக்கிச் சென்று, நேற்று ஒரு கிலோ புளி, 38 ரூபாய் முதல் 40 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது.

**விவசாயிகள் சங்க கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 06,2011,00:39 IST

ஈரோடு: தமிழக விவசாயிகள் சங்க மாநில செயற்குழு கூட்டம், ஈரோட்டில் நடந்தது. மாநிலத் தலைவர் வெங்கடாசலம் தலைமை வகித்தார். சர்க்கரை ஆலைகள் பதிவு செய்த கரும்பை முதலில் வெட்டி விட்டுத்தான், பதிவு செய்யாத கரும்பை வெட்ட வேண்டும். கரும்பு வெட்டிய 15 நாளில் பணம் தர வேண்டும். இலவச அரிசி வழங்குவதாக இரு முக்கிய கட்சிகளும் அறிவித்துள்ளன. ஆனால், அரிசி உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு, கட்டுப்படியான விலை தரவில்லை. விவசாயிகளின் நம்பிக்கை பெற்ற வேட்பாளருக்கு மட்டுமே ஆதரவளிப்பது என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**மீண்டும் பாமாயில் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 06,2011,02:26 IST

மதுரை:கடந்த இரண்டு மாதங்களாக குறைந்திருந்த பாமாயில் விலை இந்த வாரம் லிட்டருக்கு 10 ரூபாயாக விலை உயர்ந்துள்ளது. இது குறித்து எண்ணெய் வியாபாரிகள் சங்க நிர்வாகி கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது:சர்வதேச நாடுகளில் சமையல் எண்ணெய் விலை உயர்ந்துள்ளதே பாமாயில் விலை உயர்வுக்கு காரணம்.

கடந்த ஒன்றரை மாதங்களாக பாமாயில் விலை குறைந்திருந்தது. பிப்., முதல் வாரத்தில் லிட்டர் 58 ரூபாயாக இருந்தது. கொஞ்ச கொஞ்சமாக விலை குறைந்து கடந்த வாரம் லிட்டர் 45 ரூபாயாக குறைந்தது. சிகாகோ, மலேசியா, இந்தோனிசியாவில் சோயா, பாமாயில் விலை உயர்ந்துள்ளதால், தற்போது லிட்டர் 55 ரூபாயாக விலை உயர்ந்துள்ளது. இதர சமையல் எண்ணெய் விலையில் மாற்றமில்லை.

**கொன்றை மலர்களால் கூடலூர் பகுதியில் ரம்மியம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 05,2011,22:54 IST

பந்தலூர் : பந்தலூர் பகுதியில் பூத்து குலுங்கும் கொன்றை மலர்கள் பார்வையாளர்களை கவர்ந்து வருகிறது. ஏப்ரல் முதல் வாரத்தில் பூக்க துவங்கும் கொன்றை மலர்கள் பந்தலூர், கூடலூர் பகுதிகளில் தற்போது அதிகளவில் பூத்துள்ளன. மஞ்சள் நிறத்தில் கொத்து, கொத்தாக பூத்து குலுங்கும் கொன்றை மலர்கள், மலையாள மக்கள் கொண்டாடும் விசு பண்டிகையின் போது நடக்கும் பூஜைக்கு சிறப்பு சேர்ப்பதாகும். இதனால் விசு பண்டிகைக்கு முதல் நாள் இந்துக்கள் இந்த பூக்களை அதிகளவில் பறித்து செல்வார்கள். காண்பதற்கு கண்களுக்கு விருந்தளிக்கும் கொன்றை மலர்கள் சுற்றுலா பயணிகளை கவர்ந்து வருகிறது.

**வேளாண் தொழில்நுட்ப விழா**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 05,2011,21:41 IST

காரமடை : காரமடை அருகே வேளாண் தொழில் நுட்ப விழா மூன்று நாட்கள் நடந்தன. காரமடை விவேகானந்தபுரத்தில் உள்ள அவினாசிலிங்கம் வேளாண் அறிவியல் நிலையமும், அவினாசிலிங்கம் பல்கலையும், பெண்கள் தொழில் நுட்ப பூங்காவும் இணைந்து வேளாண்

தொழில் நுட்ப வார விழாவை நடத்தின. மூன்று நாட்கள் நடந்த விழாவுக்கு அவினாசிலிங்கம் பல்கலை வேந்தர் மீனாட்சி சுந்தரம் தலைமை வகித்தார்.

வேளாண் விரிவாக்கக் கல்வி இயக்ககம் இயக்குனர் கலைச்செல்வன் கருத்துக் கண்காட்சியை திறந்து வைத்தார். அறக்கட்டளை நிறுவனங்கள் இயக்குனர் லட்சுமி, துணைவேந்தர் ஷீலா, அறங்காவலர் காமினி, மனையியல் துறைத்தலைவர் தங்கமணி, ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய சுவாமிஜி ஹரிவரதானந்தா ஆகியோர் பேசினர். இரண்டாம் நாள் நடந்த நிகழ்ச்சிக்கு மகளிர் கல்வியியல் மைய இயக்குனர் லீலாவதி தலைமை வகித்தார்.

கால்நடை வளர்ப்பில் புதிய தொழில்நுட்பங்கள், ஒருங்கிணைந்த பண்ணையம், பயிர் நிர்வாகம், விளைபொருட்களை இணையதளம் மூலம் சந்தைப்படுத்துதல் பற்றி துறைத்தலைவர் மற்றும் பேராசிரியர்கள் விளக்கி பேசினர். மூன்றாம் நாள் அவினாசிலிங்கம் கல்வி அறக்கட்டளை நிறுவனங்கள் இயக்குனர் லட்சுமி சாந்தா தலைமை வகித்தார்.

பல்கலை பதிவாளர் கவுரி, மத்திய வேளாண் இன்ஜினியரிங் நிறுவன தலைவர் ஜேக்கப் அண்ணாமலை ஆகியோர் பேசினர். வேளாண்மையில் பெண்கள் பயன்படுத்தும் வேலை குறைப்பு சாதனங்கள், இயந்திரங்களின் செயல்பாடுகள், வேளாண் இன்ஜினியரிங் துறை விவசாயிகளுக்கு செய்யும் சேவைகள், வங்கியில் விவசாயிகள் மற்றும் மகளிர் சுயஉதவி குழுவினர் கடன் பெறுதல் பற்றி அந்தந்த துறை உயர் அதிகாரிகள் விளக்கி பேசினர்.

விழாவில், விவசாயிகள், மகளிர் சுய உதவிக்குழுவினர், அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களை சேர்ந்தவர்கள் பங்கேற்றனர். மகளிருக்கு போட்டிகள் வைக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

**வேளாண் பல்கலையில் வேலைவாய்ப்பு முகாம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 05,2011,21:40 IST

கோவை : தமிழ்நாடு வேளாண் பல்கலையில், 2011ம் ஆண்டுக்கான வேலைவாய்ப்பு முகாம், இரு நாள் நடந்தது. பல்கலையின் அனைத்து கல்லூரிகளையும் சேர்ந்த, 725 இளங்களை மற்றும் முதுகலை மாணவ, மாணவியர் பங்கேற்றனர். மாணவர் நல இயக்குனர் ராதாகிருஷ்ணன் துவக்கி வைத்து பேசியதாவது: நான்கு ஆண்டுளாக நடத்தப்படும் வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம், இதுவரை 1,742 மாணவர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனங்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப மாணவர்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், தகவல் பரிமாற்ற திறனை மேம்படுத்தும் வகையில், மாணவர் நல இயக்குனரகத்தில் பயிற்சியளிக்கப்படுகிறது.

இவ்வேலைவாய்ப்பு முகாமில், 31 முன்னணி நிறுவனங்கள் பங்கேற்றன. 160 மாணவர்களுக்கு பணி நியமன உத்தரவுகள் வழங்கப்பட்டன.
ஆக்ஸிஸ் வங்கி, 50 பட்டதாரிகளுக்கு பணி நியமனம் செய்யும் உத்தரவு வழங்கியுள்ளது. மேலும், 342 மாணவ, மாணவியர் இறுதி நேர்முகத் தேர்வுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

## *நீர்ப்பாசன திட்டம் மூலம் விவசாயத்தை பெருக்க நடவடிக்கை எடுக்கப்படும் ஜெயலலிதா பேச்சு*

*முதுகுளத்தூர்,ஏப்.6–*
*முதுகுளத்தூர் தொகுதியில் நீர்ப்பாசன திட்டம் மூலம் விவசாயத்தை பெருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா பேசினார்.*
*ஜெயலலிதா பிரசாரம்*
*அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா சூறாவளி பிரசாரம் செய்து தேர்தல் பிரசாரம் செய்து வருகிறார். நேற்று ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் அ.தி.மு.க. வேட்பாளர் முருகனை ஆதரித்து இரட்டை சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். அப்போது அவர் பேசியதாவது:–*
*சுதந்திர போராட்டத்தில் வெள்ளையர்களை வெளியேற்றியது போல கொள்ளைக்கார கூட்டத்தை வெளியேற்ற இன்னொரு சுதந்திரபோராட்டம் நடத்தவேண்டும். அதிமுக வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தால் முதுகுளத்தூர் தொகுதியில் நீர்ப்பாசன திட்டம் மூலம் விவசாயத்தை பெருக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஒரு மனிதனுக்கு தேவையான உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்று அனைத்தையும்*

தமிழக மக்களின் நலன் கருதி இலவசமாக வழங்கும் அ.தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு வாக்குகளை வாரிவழங்கி அமோக வெற்றிபெறச் செய்யுங்கள்.இவ்வாறு அவர் பேசினார்.

காரைக்குடி

இதையடுத்து ஜெயலலிதா ஹெலிகாப்ட்டர் மூலம் சிவகங்கை மாவட்டம் காரைக்குடி வந்தார்.

அங்கு அவர் பேசும் போது "காரைக்குடி, தேவகோட்டை நகரில் பாதாள சாக்கடை திட்டத்தை நிறைவேற்றுவோம். திருப்பத்தூர், சிவகங்கை தொகுதியின் தேவை என்ன என்பது எங்களுக்கு தெரியும். மக்களுக்கு தேவையான திட்டங்களை செயல்படுத்துவோம். சாக்கோட்டை ஒன்றிய பகுதியை மேம்படுத்த தேவையான நடவடிக்கையை மேற்கொள்வோம்" என்றார்.

தொண்டர்

பின்னர் ஜெயலலிதா காரில் ஹெலிகாப்டர் தளத்துக்கு சென்று கொண்டிருந்தபோது, சாலையோரம் நின்று கொண்டிருந்த நாகராஜன் என்ற அ.தி.மு.க. தொண்டர் குழந்தையை தூக்கியபடி சால்வையுடன் வேன் முன்னே பாய்ந்தார். போலீசார் அவரை தடுத்து நிறுத்தினர்.

உடனே ஜெயலலிதா வேனை நிறுத்தச் சொல்லி போலீசாரை விலகச்சொன்னார். அந்த தொண்டரை வேன் அருகே வரவழைத்து சால்வையை பெற்றுக் கொண்டார்.

பிறகு பரமக்குடியில் பிரசாரம் செய்தார்.

## வரி விகிதம் மாற்றப்பட்டுள்ளதால் இயற்கை ரப்பர் இறக்குமதி செலவினம் குறைய வாய்ப்பு



எஸ் சனந்தகுமார்,கொச்சி

இறக்குமதி செய்யப்படும் இயற்கை ரப்பருக்கான வரி விகிதங்கள் மாற்றப்பட்டுள்ளதால் நிறுவனங்களின் செலவினம் குறைய வாய்ப்புள்ளது என டயர் தயாரிப்பு துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

டயர் நிறுவனங்கள்

டயர் நிறுவனங்களின் வேண்டுகோளுக்கிணங்க, மத்திய அரசு, சென்ற ஆண்டு டிசம்பர் மாதத்தில் இயற்கை ரப்பர் மீதான இறக்குமதி வரியை 7.5 சதவீதமாக குறைத்தது. மார்ச் 31–ந் தேதி வரையிலான காலத்தில் 40,000 டன் ரப்பருக்கு இந்த வரி விகிதம் பொருந்தும் என அறிவிக்கப்பட்டது. அதன் பிறகு ஒரு கிலோ ரப்பருக்கு ரூ.20 அல்லது 20 சதவீதம், இதில் எது குறைவோ, அது இறக்குமதி வரியாக விதிக்கப்படுகிறது. இதனால் ரப்பர் சப்ளை மேம்படும் என இந்திய ரப்பர் தொழிற்சாலைகள் சங்கத்தின் தலைவர் வினோத் டி.சைமன் தெரிவித்தார்.

தற்போது ஒரு கிலோ இயற்கை ரப்பர் விலை ரூ.233 என்ற அளவில் உள்ளது. முன்பு 20 சதவீத வரி விதிக்கப்பட்டு இருந்தது. இதனடிப்படையில் பார்க்கும்போது டயர் நிறுவனங்கள் ஒரு கிலோ ரப்பருக்கு கூடுதலாக ரூ.47 கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். தற்போதைய திருத்தத்தின்படி ரூ.20 மட்டுமே வரி செலுத்தினால் போதுமானது. இப்போது நிறுவனங்களுக்கு சுமார் ரூ.27 மிச்சமாகும் நிலை உள்ளது.

ஆக, இறக்குமதிக்கான செலவினம் கணிசமாக குறைந்துள்ளதால் ரப்பர் இறக்குமதி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் உள்நாட்டில் பற்றாக்குறை அதிகமாக உள்ளதால் நடப்பு நிதி ஆண்டிலும் அதிக அளவில் ரப்பர் இறக்குமதி செய்யப்படுவது தவிர்க்க இயலாதது என டயர் தயாரிப்பு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

பற்றாக்குறை

கடந்த 2009–10–ஆம் நிதி ஆண்டில் 1.70 லட்சம் டன் இயற்கை ரப்பர் இறக்குமதி செய்யப்பட்டது. அவ்வாண்டில் பற்றாக்குறை 99,165 டன் என்ற அளவில் இருந்தது. நடப்பு நிதி ஆண்டில் (2011–12) இதே அளவு இறக்குமதி ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் பற்றாக்குறை 90,000 டன்னாக குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த நிதி ஆண்டில் இயற்கை ரப்பர் பற்றாக்குறை 2 லட்சம்

டன்னாக அதிகரிக்கும் என டயர் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. ரப்பர் வாரியம் இது குறித்த மதிப்பீட்டை இனிமேல்தான் வெளியிட உள்ளது.

## தேவைகள் அதிகரித்து வருவதால் 2025–ம் ஆண்டில் 4 கோடி டன் மக்காச்சோள உற்பத்தி தேவைப்படும் இந்திய வேளாண் குழுமத்தின் துணை பொது இயக்குனர் தகவல்

கோவை,ஏப்.6–

தேவைகள் அதிகரித்து வருவதால் 2025–ம் ஆண்டில் 4 கோடி டன் மக்காச்சோள உற்பத்தி தேவைப்படும் இந்திய வேளாண் குழுமத்தின் பயிர் அறிவியல் துறை துணைப்பொது இயக்குனர் எஸ்.கே.தத்தா கூறினார்.

கருத்தரங்கம்

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் மக்காச்சோளம் பற்றிய கருத்தரங்கம் நடைபெற்றது. கருத்தரங்கத்திற்கு துணைவேந்தர் முருகேசபூபதி தலைமை தாங்கினார். இயக்குனர் பரமாத்மா வரவேற்றார். இந்திய வேளாண் குழுமத்தின் பயிர் அறிவியல் துறை துணைப்பொது இயக்குனர் எஸ்.கே.தத்தா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, மக்காச்சோளம் ஆராய்ச்சி இயக்கத்தின் இணையதளத்தை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

மக்காச்சோளம் அற்புதமான பயிர் ஆகும். இதில் ஏராளமான சத்துக்கள் நிறைந்து உள்ளதால் உணவுக்காகவும், கால்நடைகளுக்கு தீவனமாகவும் பயன்படுத்தப்படுகிறது. இதனால் மக்காச்சோளம் உற்பத்தியில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

உற்பத்தி அதிகரிப்பு

கடந்த சில மாதங்களில் மக்காச்சோளத்தின் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறன் கணிசமாக அதிகரித்து உள்ளது. தற்போது இந்தியாவில் இருந்து 30 லட்சம் டன் மக்காச்சோளம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதனால் நாட்டின் வருமானம் அதிகரித்து உள்ளது. மக்காச்சோளம் உற்பத்தி தற்போது 19 முதல் 20 மில்லியன் டன்களாக உள்ளது. தேவைகள் அதிகரித்து வருகிறது. இதனால் 2025–ல் 4 கோடியே 30 லட்சம் டன் மக்காச்சோள உற்பத்தி தேவைப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சாகுபடி பரப்பளவை அதிகரிக்க வாய்ப்பு இல்லாதநிலையில், உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு உள்ளது. குறிப்பாக ஆராய்ச்சி திடல்கள் மகசூலுக்கும், விவசாய

நிலங்களுக்கு இருக்கும் இடைவெளியை குறைக்க வேண்டும். அதற்கான வழிமுறைகளை நாம் கண்டறிய வேண்டும்.

ஆராய்ச்சி அணுகுமுறைகள்

அந்தவகையில் பி.டி. மற்றும் களைகொல்லிகளை தாங்கி வளருதல் ஆகிய இரு பண்புகளை கொண்ட மக்காச்சோளம் பயிர்களை பற்றிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆராய்ச்சிகளை தொடர்ந்து சாகுபடிக்கு வரும்போது விவசாயிகள் அதிக பயன் அடைவார்கள். மேற்கத்திய நாடுகள் பயிர் உற்பத்தி தொடர்பாக அதிக அளவில் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றன. இந்த ஆராய்ச்சி அணுகுமுறைகளை இந்தியாவில் கடைபிடித்தல் சிறந்தது. தனியார் துறைகள், பொது நிறுவனங்கள் ஆராய்ச்சிகளுக்கு முதலீடு செய்வது அவசியம். மக்காச்சோளம் உற்பத்தியை அதிகரிக்க மக்காச்சோள ஆராய்ச்சியாளர்கள், பொதுத்துறை ஆராய்ச்சியாளர்கள், விவசாயிகள், தொழிற்சாலை பிரதிநிதிகள் கலந்தாய்வு செய்வது அவசியம்.

இவ்வாறு எஸ்.கே.தத்தா கூறினார்.

திட்ட அறிக்கை

கருத்தரங்கில், புதுடெல்லி டி.எம்.ஆர். திட்ட இயக்குனர் சாய்குமார் திட்ட அறிக்கை வாசித்தார். இந்திய வேளாண் குழுமத்தின் பயிர் அறிவியல் துறை உதவிப்பொது இயக்குனர் துவா மக்காச்சோள உற்பத்தி வழிமுறைகள் குறித்து பேசினார். கருத்தரங்க மலர் வெளியிடப்பட்டது. இதில் விஞ்ஞானிகள், பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,740-2,770

**மணிலா பயறு**

80கிலோ கொண்ட மூட்டை 3,500-3,550

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட) 7,550-00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,425-00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின் (வரிஉள்பட) 1,780-00

**நல்லெண்ணெய்**

குமரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா,புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1குவிண்டால்(வரிஉள்பட) 11,500-00
டின் (15கிலோ) 1,700-00

**விளக்கெண்ணெய்**

ஒருகுவிண்டால் (வரிஉள்பட) 11,200.00
15கிலோடின் (வரிஉள்பட) 1,850-00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ
டின் (வரிஉள்பட) 1,135.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,325.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட)1,095.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி) 555-00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,ஏப்.2-

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:-

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 12,000 | 150.00 |
| மல்லி (40கி) | ரூ. 2,400 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 8,950 | 109.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,000 | 110.00 |
| துவரப்பருப்பு | ரூ. 6,500 | 67.00 |
| கடலைப்பருப்பு (பாம்பே) | ரூ. 3,900 | 41.00 |
| உளுத்தம் பருப்பு (கருப்பு) (50 கி) | ரூ. 7,100 | 73.00 |
| உளுத்தம்பருப்பு (வெள்ளை) | ரூ. 7,100 | 73.00 |
| துட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 5000 | 52.00 |
| சுண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,400 | 48.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 6,400 | 66.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,000 | 62.00 |
| கொள்ளு | ரூ 2,000 | 22.00 |
| கடலைப்பருப்பு (டெல்லி) | ரூ. 3,300 | 35.00 |
| சர்க்கரை | ரூ. 2,800 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,ஏப்.5-

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:-

1. வி.797 22எம்.எம் ரூ. 13,020
2. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 17,412
3. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 16,591
4. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 17,378
5. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 17,294
6. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 23,340

## எண்ணை மார்க்கெட்

கோவை,ஏப்.5-

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:-

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,360 | 87.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1100 | 70.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1150 | 74 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1030 | (-) |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1100 | 73.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,380 | 100.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1520 | 110.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,750 | 110.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,000 | 59.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,200 | 80.00 |
| வனஸ்பதி | | |
| லில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,225 | - |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 990 | - |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,030 | - |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,030 | - |

## மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்

மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி விலை விவரம் வருமாறு:-

| காய்கறிகள் | குறைந்தப்பட்ச விலை | அதிகப்பட்ச விலை |
|---|---|---|
| உருளைகிழங்கு(45 கிலோ) | ரூ.400.00 | ரூ. 550.00 |
| முட்டைகோஸ்(1 கிலோ) | ரூ 2.00 | ரூ. 4.00 |
| கேரட் (1 கிலோ) | ரூ.8.00 | ரூ.15.00 |
| பீட்ரூட் (1 கிலோ) | ரூ.6.00 | ரூ.11.00 |
| முள்ளங்கி ( 1 கிலோ) | ரூ.5.00 | ரூ.8.00 |
| பீன்ஸ்(1 கிலோ) | ரூ.8.00 | ரூ.15.00 |
| நூல்கோல்(1 கிலோ) | ரூ.10.00 | ரூ.15.00 |
| டர்னிப்பீஸ் (1 கிலோ) | ரூ.12.00 | ரூ.13.00 |
| மேராக்காய் | ரூ.7.00 | ரூ.10.00 |

## கோவை உழவர் சந்தை

கோவை,ஏப்.5-

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:-

**காய்கறிகள் (கிலோவுக்கு)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 60-00 | காலிப்பிளவர் | ரூ. | 22-20 |
| கத்தரிக்காய் | ரூ. | 12-14 | பொறியல் தட்டை | ரூ. | 8-10 |
| வெண்டைக்காய் | ரூ. | 14-16 | பச்சை மொச்சை | ரூ. | 28-00 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 5-6 | தேங்காய் | ரூ. | 12-13 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 7-8 | பட்டாணி | ரூ. | 48-00 |
| புடலை | ரூ. | 7-8 | பூண்டு | ரூ. | 110-120 |
| பீர்க்கான்காய் | ரூ. | 16-18 | கறிவேப்பிலை | ரூ. | 30-00 |
| சுரைக்காய் | ரூ. | 8-10 | அகத்தி | ரூ. | 15-00 |
| பாகற்காய் | ரூ. | 12-14 | வாழைக்காய் | ரூ. | 14-00 |
| கொத்தவரை | ரூ. | 10-12 | திராட்சை | ரூ. | 40-00 |
| பூசணிக்காய் | ரூ. | 12-00 | திராட்சை (பச்சை) | ரூ. | 66-70 |
| அரசாணிக்காய் | ரூ. | 8-10 | குடைமிளகாய் | ரூ. | 40-00 |
| மேராக்காய் | ரூ. | 18-00 | சாதா பீன்ஸ் | ரூ. | 16-18 |
| பச்சை மிளகாய் | ரூ. | 20-22 | டபுள்பீன்ஸ் | ரூ. | 34-00 |
| குண்டு மிளகாய் | ரூ. | 24-00 | கறிபீன்ஸ் | ரூ. | 24-00 |
| சின்னவெங்காயம் | ரூ. | 18-19 | புஸ்பீன்ஸ் | ரூ. | 30-32 |
| பெரியவெங்காயம் | ரூ. | 10-00 | காளான் | ரூ. | 80-140 |
| இஞ்சி | ரூ. | 32-00 | இளநீர் (ஒன்று) | ரூ. | 10-13 |
| முருங்கைக்காய் | ரூ. | 22-00 | மாங்காய் | ரூ. | 28-00 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 18-20 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 15-16 |
| சேனைகிழங்கு | ரூ. | 18-19 | கொய்யா1கிலோ | ரூ. | 24-00 |
| கருணைகிழங்கு | ரூ. | 24-00 | மாதுளை1கிலோ | ரூ. | 170-00 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22-00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 15-16 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 14-15 | வரமிளகாய் | ரூ. | 100-00 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 14-00 | மாம்பழம் | ரூ. | 70-00 |
| சிறுகிழங்கு | ரூ. | 28-00 | ஆப்பிள் | ரூ. | 115-00 |
| முள்ளங்கி | ரூ. | 10-00 | சாத்துக்குடி | ரூ. | 37-00 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 22-00 | நெல்லிக்காய் | ரூ. | 50-00 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 9-10 | ஆரஞ்சு | ரூ. | 50-00 |
| நூல்கோல் | ரூ. | 9-8 | வெள்ளரி | ரூ. | 8-10 |
| கொத்தமல்லி | ரூ. | 15-16 | புளி 1 கிலோ | ரூ. | 80-00 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 16-00 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 32-00 |
| முட்டைகோஸ் | ரூ. | 8-10 | அவரை | ரூ. | 12-24 |
| கலர்கோஸ் | ரூ. | 14-00 | நிலக்கடலை | ரூ. | 36-00 |
| புதினா | ரூ. | 15-00 | மக்காச்சோளம் | ரூ. | 3.50-00 |
| | | | தர்பூசணி | ரூ. | 9-00 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ.22400 |
| மிளகு (சேட்டன்) | ரூ.22800 |
| மிளகு (வயநாடன்) | ரூ.23450 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 15000 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 10000 |
| சுக்கு(புதியது) | ரூ.10100 |
| சுக்கு(பழையது) | ரூ.1000 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ.9600 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ.6500 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ.6575 |
| கொப்பரை நாடன் | ரூ.6400 |
| கொப்பரை ராசு | ரூ.6875 |
| கொப்பரை தில்பசன் | ரூ.6350 |
| கொப்பரை ராஜீப்பூ | ரூ.6750 |
| உருண்டை கொப்பரை | ரூ. 6450 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 22300 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 23100 |
| ரப்பர் பால் | ரூ. 17300 |
| காப்பி | ரூ. 9500 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 2800 |
| நேந்திரகாய் | ரூ. 1200 |
| இஞ்சி | ரூ. 1350 |

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 15,544.00 | 15520.00 | 15560.00 |
| ஒரு கிராம் | 1,943.00 | 1,940.00 | 1,945.00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 57,480.00 | 61,500.00 | 61,500.00 |
| ஒரு கிராம் | 61.50 | 61.50 | 61.50 |

## பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.217.00 | அதிகபட்சவிலை | ரூ.275.00 |
| சராசரி விலை | ரூ.198.23 | சராசரி விலை | ரூ.272.72 |
| குறைந்தபட்சவிலை | ரூ.150.00 | குறைந்தபட்சவிலை | ரூ.175.00 |

**பட்டு நூல் ரூ.1,845**



பொள்ளாச்சி அருகே நவமலைப் பகுதியில் பிறந்து 2 நாட்களே ஆன குட்டியுடன் உலா வரும் காட்டு யானையை படத்தில் காணலாம்.

### பொள்ளாச்சி அருகே நவமலை வனப் பகுதியில்

# பிறந்து 2 நாளே ஆன குட்டியுடன் உலா வரும் காட்டு யானை

## வனத்துறையினர் கண்காணிப்பு

பொள்ளாச்சி,ஏப்.6-

பொள்ளாச்சி அருகே நவமலை வனப்பகுதியில் பிறந்து 2 நாட்களே ஆன குட்டியுடன் தாய் காட்டு யானை உலா வருகிறது. அந்த யானையை வனத்துறையினர் கண்காணித்து வருகிறார்கள்.

**யானைக்கூட்டம்**

ஆனைமலை புலிகள் காப்பகத்தில் நூற்றுக்கணக்கான யானைகள் கூட்டம், கூட்டமாக வசித்து வருகின்றன. யானைகள் விரும்பி உண்ணும் மூங்கில் மரக்கன்றுகள், புல் வகைகள் அதிகளவில் புலிகள் காப்பகப் பகுதிகளில் உள்ளது. மேலும் யானைகள் சுற்றித் திரிவதற்கு வசியான அடர்ந்த வனப் பகுதிகளிலும், குடிநீர் தாகத்தை போக்க வற்றாத நீரோடைகளும் இந்த புலிகள் காப்பகப்பகுதிகளில் இருக்கிறது.

குறிப்பாக ஆனைமலை புலிகள் காப்பகம் பொள்ளாச்சி வனச்சரகத்திற்கு உட்பட்ட வில்லோனி பீட் பகுதியில் யானைகள் அதிக எண்ணிக்கையில் வசித்துவருகின்றன. ஆழியாறு அணையில் தண்ணீர் குடித்து அந்தப் பகுதிகளில் உள்ள உணவுபொருட்களை தின்றுபசியாறி வருகின்றன. இந்த நிலையில் வில்லோனி பீட் பகுதியில் உள்ள பொள்ளாச்சியில் இருந்து நவமலை செல்லும் வழியில் சாலையோரத்தில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு ஒரு யானை குட்டி போட்டது.

**கண்காணிப்பு பணி**

சுமார் 300 கிலோ எடை கொண்ட இந்த குட்டி யானை தாய் யானையிடம் பால் குடித்து கால்களை சுற்றி சுற்றி வந்து கொண்டு இருக்கிறது. கடந்த 2 நாட்களாக அந்த குட்டியுடன் தாய் யானை அந்தப்பகுதியிலேயே நின்று கொண்டு இருக்கிறது.வழக்கமாக குட்டி போட்ட யானைகள் குட்டியை பிறவிலங்குகளிடம் இருந்தும், மனிதர்களிடம் இருந்தும் பாதுகாக்க ஆக்ரோஷமாக மோதும் தன்மையுடன் இருக்கும்.

எனவே, தற்போது நவமலை பகுதியில் குட்டியுடன் உள்ள காட்டு யானை அருகே யாரும் செல்லாத வகையில் பொள்ளாச்சி வனச்சரகர் வீரமணி தலைமையிலான வனக்குழுவினர் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். மேலும் யானையுடன் உள்ள குட்டியை பொதுமக்களும், சுற்றுலா பயணிகளும் கண்டு ரசித்து செல்கிறார்கள்.

தினகரன்

## கொத்தமல்லி விலை கிடுகிடு

பதிவு செய்த நாள் 4/6/2011 1:31:18 AM



திருப்பூர்: திருப்பூர் மாவட்டம் பல்லடம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளான தேத்தனு ர், ஜல்லிப்பட்டி, மந்திரிபாளையம், மாணிக்காபுரம், கே.கிருஷ்ணாபுரம், ஊஞ்சபாளையம், பொங்கலு ர் உள்ளிட்ட பகுதிகளில் கொத்தமல்லி தழை சாகுபடி செய்யப்பட்டிருந்தது. நிழல் பகுதியில் தான் கொத்துமல்லி தழை செழித்து வளரும். தற்போது கொளுத்தும் வெயில் காரணமாக கொத்தமல்லி உற்பத்தி பெரும் அளவில் குறைந்துவிட்டது. இதனால் விலை 2 மடங்காக உயர்ந்துள்ளது. கடந்த வாரத்தில் ஒரு கட்டு ^2க்கு விற்று வந்த கொத்தமல்லி தற்போது ரூ.4க்கு விற்கப்படுகிறது.